தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

தொகுதி 1 | தி. பி. 2013 நளி 12 | (28 - 11 - 1982) | விலை 65 காசு | இதழ் எண் : 4 | பகுதி 4

★ சலுகைகள் பெறுவதற்காகச் சாதியுணர்வை வளர்க்க வேண்டியதில்லை !

★ சாதியுணர்வால் தமிழினம் மேலும் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் தங்கிவிடலாம் !

★ சலுகையால் கிடைக்கும் நன்மைகளைவிட சாதியுணர்வால் வரும் தீமைகளே மிகுதி !

✱ தமிழின நலம் நோக்கிக் கட்சித் தலைவர்களுக்குப் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் வேண்டுகோள் அறிக்கை !

சென்னை. நவம். 25: – ‘ தமிழ் நாட்டில் அண்மையில் சாதியுணர்வுகள் மிகுதியாகத் தோன்றியும், புதுப்பிக்கப்பட்டும் வருகின்றன, சாதி மாநாடுகள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு சாதியினமும் தம் தம் உணர்களைப் புதுப்பித்துக் கொண்டு செயல்படத் தொடங்கிவிட்டன. இது தமிழின முன்னேற்றத்திற்கு நல்லதில்லை. வளர்ந்து வரும் தமிழின முன்னேற்றம் இதால் தடைப்படும்’ என்று உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வர் **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** தாம் அண்மையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் எச்சரித்துள்ளார். இது பற்றிப் **பாவலரேறு** மேலும் தம் அறிக்கையில் கூறுவதாவது :

‘தமிழ் நாட்டில் கடந்த இருபது இருபத்தைந்து ஆண்டுகளாக அடங்கிக் கிடந்த சாதியுணர்வு மீண்டும் தலைதூக்கி வருவது பெரிதும் வருந்தத் தகுந்தது. தந்தை பெரியார் அவர்களின் அருந்தொண்டால் கடந்த காலத்தில் சாதியுணர்வு ஓரளவு தணிந்திருந்தது. அவர் மறைவுக்குப் பின் அவ்வுணர்வு படிப்படியாகக் கிளர்ந்தெழுந்து வளர்ந்து வருகிறது, சாதியுணர்வை மிகுவாகக் கண்டித்துக் கடந்த காலத்தில் தந்தை பெரியார் அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும் புரட்சிப் பாவலர் பாரதிதாசன் அவர்களும் ஓய்வு ஒழிவில்லாத பேச்சாலும், எழுத்தாலும் பற்பல கருத்துகளை வெளியிட்டனர். ஆனால் இக்கால் அக்கருத்துகளெல்லாம் வலிவிழந்து வருமளவுக்குத் தமிழர்களிடையே சாதியுணர்வு வெறியாக உருவெடுத்து வளர்ந்து வருகிறது.

உயர்பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், அரசுப் பணியாளர்கள், கலைஞர்கள், அறிஞர்கள், ஆட்சியாளர்கள் முதலிய அனைத்து நிலையினரிடத்தும் சாதிவெறி தலைதூக்கியிருக்கிறது. கல்லூரிகளில் மாணவர்கள் ‘சாதிச் சங்கங்களை’ தோற்றுவித்து வளர்த்து வருகின்றனர். அவர்கள் போட்டியிடுகின்ற தமிழ் மன்றங்கள், இலக்கிய அறிவியல் கழகங்கள் முதலியவற்றில் சாதிகளின் அடிப்படையில் போட்டியிடுகின்றனர். ஒரு சாதிக் கொருசாதி காழ்ப்புணர்வாலும் கசப்புணர்வாலும் பூசல்களும் கலகங்களும் விளைவித்துக்கொண்டு அடிதடியும் குத்துக் கொலையுமாகப் போராடிக் கொள்கின்றனர். ஒவ்வொரு சாதி மாணவர் குழுவினரும் தங்கள் தங்கள் சாதிப் பேராசிரியர்களையே, கல்லூரி முதல்வர்களையே ஆதரிக்கின்றனர். பிற சாதியார்களை வெறுக்கின்றனர். அல்லது அவர்களைப் போராடி வேறிடங்களுக்கு விரட்டுகின்றனர். ஆசிரியர்களும் தங்கள் சாதி மாணவர்கள் படித்து முன்னேறுவதிலேயே கவனம் செலுத்துகின்றனர்.

தொழிலாளர் கழகங்கள் ஒட்டுமொத்தமான தொழிலாளர் முன்னேற்றத்தைக் கைவிட்டு விட்டு, தம் தம் சாதியார்களைச் சேர்த்து அவர்களின் முன்னேற்றத்திற்கே பெரிதும் பாடுபடுகின்றன. கழகத் தலைவர்களாகத் தம் தம் சாதியினத் தலைவர்களையே வைத்துக் கொள்கின்றனர். அரசுப் பணியாளர்கள், கலைஞர்கள் ஆகியோரிடமும் சாதியுணர்ச்சி தாண்டவமாடுகிறது.

சாதி மாநாடுகள் ஊருக்கு ஊர் கூட்டப்படுகின்றன. அவற்றுக்குப் பெருஞ் செல்வர்களும், பொதுநலங் கருதும் தலைவர்களும் வலிந்து அழைக்கப் பெறுகின்றனர். அவர்களும் கூசாமல் நாணாமல் அவற்றுக்குத் தலைமை தாங்குவதும், அங்குப் போய்ச் சாதி நலங்கூறிச் சொற்பொழிவுகள் செய்வதும் மிக மிக வருந்தத்தக்க நிகழ்ச்சிகளாக நாடெங்கும் நடந்து வருகின்றன. வேறு தகுதிகளில் தங்களை ஈடேற்றிக் கொள்ள இயலாத தலைவர்கள் சிலர், சாதியமைப்புகளைக் கூறி உள்நாட்டிலும் அயல் நாடுகளிலும் பெயரும் புகழும் பெற்றுப் பொன்னும் பொருளும் திரட்டி வருகின்றனர்.

சாதியொழிப்பையே தங்கள் கட்சிகளின் தலையாய கொள்கையாகக் கொண்ட கட்சிகளும்கூட, பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட பிரிவுகளுக்கு அரசிடம் கல்வி, பணிச் சலுகைகளுக்காகப் போராடும் நோக்கில், மறைந்திருந்த சாதியுணர்வுகளை வெளிப்படையாகக் கூறிப் போராடத் தொடங்கிவிட்டன. இப்பொழுது கட்சிகளெல்லாம் கூட சாதிக் கூடாரங்களாக வளர்ந்து வருவது மிகவும் கண்டிக்கத் தக்கது.

சலுகைகள் பெறுவதற்காகச் சாதியுணர்வை வளர்க்க வேண்டுமென்பது பாராட்டக்கூடியதோ, முன்னேற்றத்தை நோக்கிய கொள்கையைச் செயற்படுத்துவதோ ஆகாது. சாதியுணர்வால் தமிழின முன்னேற்றம் என்பது கைகூடாத ஒன்றாகப் போய்விடும். அதனால் அது மேலும் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் தங்கிப் போய்விடும். அரசுச் சலுகைகளால் கிடைக்கும் நன்மைகளைவிட சாதியுணர்வுகளால் தமிழினத்திற்கு ஒட்டுமொத்தமாகக் கிடைக்கும் தீமைகளே மிகுதி. இன்றுள்ள நிலையில் தமிழினத்திற்கு ஒட்டுமொத்தமாகக் கிடைக்க வேண்டிய முன்னேற்றத்திற்காகவே அனைத்துத்தமிழினக் கட்சித் தலைவர்களும் பாடுபட வேண்டும். அதை விட்டு விட்டுத் தனித்தனி சாதி முன்னேற்றத்திற்குப் பாடுபடுப் போக்கு இனத்தைப்பெரிதும் பின்னடையச் செய்துவிடும். ‘சலுகை போனால் போகட்டும்; என், அலுவல் போனால் போகட்டும்; தலைமுறை ஒரு கோடி கண்ட, என் தமிழ் விடுதலையாகட்டும்’ என்று பாவேந்தர் அறை கூவினார். அந்த உணர்வு அனைத்துத் தமிழர்க்கும் வருதல் வேண்டும்.

தமிழ்நாட்டில் பார்ப்பனரல்லாத தமிழர்களுக்கு, தேவையானால், சாதிகள் அடிப்படையிலன்றி, பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்

(3ஆம் பக்கம் பார்க்க)

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

★ திராவிட இயக்கங்களும் இதழ்களும் நிறைய இருந்தும், புதிய இயக்கமும், இதழும் தோன்றக் காரணம் என்ன?

பன்மொழிப்புலவர். கா. அப்பாத்துரையார் விளக்கம்!

சென்னை, நவம்பர்—7.

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் செய்தியிதழாகிய 'தமிழ் நிலம்' கிழமையிதழை வெளியிட்டு வைத்துப் பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார் கடந்த 7-11-82 அன்று ஆற்றிய சொற்பொழிவின் தொடர்ச்சி, இது. அவர் பேச்சு இன்னும் தொடர்ந்து வரும் மேலும் பேசும்பொழுது அவர் குறிப்பிட்டதாவது:

"நம்முடைய இனக் கொள்கை அடிப்படையிலே இதழ்கள், இயக்கங்கள் பல இருந்திருக்கின்றன. திராவிட இயக்கங்கள் முழுமையும் இனக் கொள்கை அடிப்படையில் அமைந்தவைதாம். நயன்மைக் கட்சியின் தோற்றத்திலிருந்து இதை நம் வழிவழிக் கொள்கையாக நடத்தி வருகின்றோம். இந்த இனக் கொள்கையை உடைய இயக்கம் பல அணிகளாக ஒவ்வொரு காலத்திலும் இருந்தாலும்கூட தமிழ் ஒரு காலத்தில் எழுந்தும் ஒரு காலத்தில் தாழ்ந்தும் இந்த இருபதாம் நூற்றாண்டு முழுவதும் இருந்து வந்திருக்கின்றது. அப்படியிருந்தும் புதிய இதழ் தொடங்குவதற்கு என்ன காரணம்? இந்த இயக்கங்களெல்லாம் இருக்கின்றனவே என்று பலர் எண்ணக்கூடும். பல வகைக் கொள்கைப் போராட்டங்களை நடத்திய அந்த இயக்கங்கள் நம்மைச் சூழ்ந்து நின்று இதற்காகவே கூட பாடுபடுகின்ற நிலையில்தான் இருக்கின்றன. இருந்த போதும் கூட நாம இப்போது புதியதாக இயங்குகின்ற ஓர் அமைப்பை அமைத்திருக்கிறோம். இந்த அமைப்பு தமிழ் சார்பான மற்ற இயக்கங்கள், கட்சிகள் போன்றது அன்று. இது வரை நடந்த இயக்கங்கள், கட்சிகள் எல்லாம் பெரும்பாலும் தமிழகத்துக்குள்ளேயே அடங்கியிருந்தன. பாண்டிச்சேரிக்குக் கூட அங்கும் ஒரு தனி அமைப்புப் போல் நடத்திக் கொண்டிருக்கிறோமே தவிர தமிழகத்துக்குள்ளேயே இருக்கிறோம். இதற்கு வெளியில தமிழர்கள் பல வேறு நாடுகளில் வாழ்கிறார்கள். அவர்கள் எந்தெந்த நாட்டில் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்று கூட நம் இந்தியாவில் உள்ள தமிழர்களுக்குத் தெரிய வராமலே நெடுங்காலம் இருந்து வந்திருக்கிறது. இப்போது ஓரளவிற்கு நாம் இதைத் தெரிந்திருக்கிறோம். இன்னும் முழுக்க உண்மையாகத் தெரிந்திருக்கிறோம் என்றும் கூறுவதற்கில்லை. அதே போல் தமிழின மொழிகள் என்று கூறுகிறோமே திரவிட இனமொழிகள், அவை எத்தனை மொழிகள் என்பதும் நிரம்பகாலம் தெரியாமலே இருந்தது. அண்மைக் காலத்திலே 20, 25 வரைக்கும் இருக்கிறது என்று கூறுகிறார்கள். அதனுடைய கணக்கும் உண்மையாகத் தெரியவில்லை. இவற்றையெல்லாம் தெரிந்து கொண்டு உலகில் தமிழ் மொழி பேசுபவர்களிடையே ஓர் ஒற்றுமை - தமிழினம் ஆகியவையிடையே ஓர் ஒற்றுமை ஏற்படுத்த வேண்டும்.

எடுத்துக்காட்டாக, இப்போது நாமும் நம்முடைய அன்பர் இராமலிங்கனார் அவர்களும் நல்ல தனித் தமிழ்ச் சொற்களை அறிவியலுக்கும், நம்முடைய சட்டங்களுக்கும் அமைக்க முயல்கிறோம். அப்படி அமைக்கும் போது தமிழ்நாட்டில் ஒரு தொகுதி, ஈழத்தில் ஒரு தொகுதி, சிங்கப்பூரில் ஒரு தொகுதி என்று அமைக்கிறோம். மேலை நாடுகளில் ஒரு மொழி இரண்டு, மூன்று நாடுகளில் பேசப்பட்டாலும் மொழிச் சார்பான அமைப்புகள் எல்லா நாடுகளுக்கும் சேர்ந்து ஒரே அமைப்பாக இருக்கிறது. மொழி சார்ந்த அரங்கங்கள் (Departments) பல நாடுகளில் இருந்தாலும் கூட எல்லாம் ஒரே அடிப்படைச் சொற்களை அமைத்துக் கொள்ளுகின்றன. இதே போல் நாமும் தமிழ் சார்பான ஆராய்ச்சி, தமிழ் மொழி பற்றிய உண்மைகள், தமிழ்நாட்டு வரலாறு இவற்றையெல்லாம் பொதுவாக எழுத வேண்டும் என்று தமிழ இயக்கச் சார்பானவர்களும், திரவிட இயக்கச் சார்பானவர்களும் கடந்த 75 ஆண்டுகளாகச் சொல்லிக் கொண்டே தான் இருக்கிறார்கள். ஆனால் நம்முடைய பல்கலைக் கழகங்களும், நம்முடைய கல்லூரிகளும் இன்றிருக்கின்ற நிலையில் அதைச் செய்யவே வழியில்லை. பலமுறை முழுமனத்துடன் செய்ய வேண்டுமென்று தொடங்கினால்கூட அவற்றிற்கு மேலிருந்து ஏதாவது ஒரு புதிய வேண்டுகோள் ஆணை பிறப்பித்து அதை அப்படியே ஒத்திப் போட்டு விடுகிறார்கள். இதே போல் இரா. பி. சேது (பிள்ளை) சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'திராவிட மொழி ஒப்பியல் அகர வரிசை' வேண்டுமென்று மூன்று நான்கு தடவை ஏற்பாடு செய்து நான்கு தடவைகளும் பாதி நடந்து அப்படியே மெல்ல ஒதுக்கிவைக்கப் பட்டது.

இந்த நிலையில் ஒரு புதிய அமைப்பிலிருந்து ஒருவர்க்கொருவர் தொடர்பு; ஒருவரைப்பற்றி ஒருவர் செய்தி; அவர்களைப்பற்றி ஏதாவது குறைகளிருந்தால் அந்தக் குறைகளைத் தீர்த்துக் கொள்ள வழி; அதற்காக அரசிடம் பேச வேண்டியிருந்தால் அல்லது தமிழக அரசு அல்லது இந்திய அரசு அல்லது திராவிட உலக அரசுகளிலே போராடுவதற்கும் உறவாடுவதற்கும், உருக்கமிடுவதற்கும் கூட அமைப்பு வேண்டுமே? அந்த அமைப்பு இல்லாத காரணத்தினால் தான் முக்கால நூற்றுண்டுகளுக்கு முன்னிருந்த காலமுதல் தமிழர்கள் அடைந்த தொல்லைகள் மிகமிகப் பல.

காந்தியடிகள் ஆப்பிரிக்காவில் உழைத்த காலத்தில் அங்கிருந்த இந்தியர்களில் பெரும்பாலார் தமிழர்கள். அந்தத் தமிழர்களில் பெரும்பாலார் கூலிகள். அவர்களில் யார் என்ன தொழில் செய்தாலும் தமிழர்களுக்கு 'கூலி' என்று பேர் சொன்னார்கள் என்று சொல்லப்படுகிறது. இவ்வாறு தமிழர்கள் கூலிகளாக நடத்தப்பட்ட காலத்தில் சைகோனிலிருந்து செட்டிமார்கள் துரத்தப்பட்டே ஓடிவந்தார்கள். துரத்தப்பட்டவர்கள் கோடிக்கணக்கான பணத்தையும் பொருளையும் அங்கேயே போட்டுவிட்டு ஓடி வந்தார்கள். பலர் தங்களுடைய மனைவி மக்களையும் இங்கு வந்து தேடவேண்டியதாயிற்று. அதன் பின்னல் பர்மாவிலிருந்து ஏதிலிகள் வந்தார்கள். இங்கெல்லாம் ஒரு நாட்டில் தமிழர்கள் துயர்ப்படும்போது, மற்ற நாடுகளில் உள்ள தமிழர்கள் இதைப்பற்றி கவலைப்படவில்லை. ஏனென்றால் தமிழர்கள் எங்கெல்லாம் இருக்கின்றார்கள் என்றே அவர்களுக்குத் தெரியாதல்லவா?

முக்கால் நூற்றாண்டுக்கு முன்பு இந்தியர்களுடைய நிலையே இப்படித்தான் இருந்தது. அப்படியிருந்த காலத்திலே இந்தியன் எதிரியாக கேட்பாரில்லாத நிலையில் உலகில் துயரப்பட்டான் இந்த நிலை இன்றில்லையானாலும் இந்தியாவுக்குத் தன்னாட்சி கிடைத்த பிற்பாடு கூட அந்த நிலையிருந்தது. இன்று தமிழன் அவ்வளவு கீழான நிலையில் இல்லையானாலும் 'உலகத் தமிழன்' பற்றிய மட்டில் நிலை தாழ்வாகவே உள்ளது. தமிழ் மொழியைச் சார்ந்து இந்திய திராவிட இயக்கமோ, இந்தியப்பேராய இயக்கமோ இந்தியப் பொதுவுடைமை இயக்கமோ நடக்கவில்லை. அவர்களுக்கெல்லாம் கட்சி என்கிற அடிப்படையில் மக்களுடைய ஒப்போலைகளைப் பெற்று ஆளுகின்ற அளவிற்குத்தான் உரிமைகள் இருக்கின்றனவே தவிர, அவர்களுக்குக் கீழிருக்கின்ற மக்களுக்குத் தேர்தல் நேரத்தில் உணவு கொடுக்கிறேன், அது கொடுக்கிறேன், கல்வி கொடுக்கிறேன் என்று சொன்னார்களே அதைச் செய்து, எவ்வளவு செய்தால் அடுத்த தடவை மக்களின் ஒப்போலை கிடைக்குமோ அந்த அளவிற்குத் தான் தமிழர்களின் நிலை மாறியிருக்கிறதே தவிர வேறில்லை.

தொடரும்...

தமிழ் நிலம்

உ. த. மு க. செய்தியிதழ்
கிழமை வெளியீடு (Weekly)

சிறப்பாசிரியர் :
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

0 இஃது ஓர் உ. த. மு. க. வெளியீடு
0 சென்னையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் வெளியூர்களில் ஒவ்வொரு காரி(சனி)க் கிழமையும் கிடைக்கும்.
ஒவ்வோரிதழிலும்...
0 உ. த. மு. க செய்திகள்:
0 அரிய வரலாற்றுப் பொருளியல் கட்டுரைகள்:
0 மொழி, இன ஆராய்ச்சிக் கட்டுரைகள்:
0 இன, நாட்டு விடுதலை வரலாறுகள்:
0 கலை, இலக்கியச் செய்திகள், கதைகள்!
0 சூடான நடைமுறை அரசியல் திறனாய்வுகள்:
0 பிற சிறப்புச் செய்திகள்:
... அனைத்தும் இடம் பெறும்!
0 இதழின் அளவு ¼ டெம்மி, (16½" × 11½")
0 விலை விளக்கம்:

தனியிதழ் 0.65 காசு.

ஆறு மாதக் கட்டணம் (26 கிழமைகள்)	18.00 உருபா
ஓர் ஆண்டுக் கட்டணம் (52 கிழமைகள்)	36.00 உருபா

ஐந்தாண்டுக் கட்டணம்: 175.00 உருபா
ஓரிதழ்க்கு 1 உருபா முன் பணம் கட்டக்கூடிய முகவர்கள் எழுதிக் கேட்க!

அல்லது ஓரிதழ்க்கு 50 காசு மேனிக் கணக்கிட்டு, 20 படிகளுக்கும் அதற்கு மேலும், எத்தனைப் படிகள் வேண்டுமாயினும், அப் படிகளுக்குரிய தொகையை முன் பணமாக விடுத்து இதழ்களைப் பெற்றுக் கொள்க.

அமைச்சர்
தமிழ் நிலம்
5, அருணாசலத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5.

ஈழத் தமிழரைத் தமிழகத் தமிழரே கொடுமைப்படுத்தும் கயமை!

மண்டபம் ஏதிலியர் தங்கலில் அவர்கள் படும்பாடு!

"மண்டபம் 'பாசறையில் ஈழத்திலிருந்து ஏதிலிகளாய் அனுப்பப்பட்டு வரும் நம் முன்னாள் தமிழக மக்கள்—உண்மைத் தமிழர்கள் இங்குள்ள மக்களாலேயே பல வழிகளிலும் அலைக்கழிக்கப் படுகின்றனர். அவர்கள் நம் உடன் பிறப்புகள் என்பதினையும் மறந்து ஏதோ அடவிகளில் இருந்து சிங்கள வெறியரால் பிடித்து அனுப்பப்பட்ட விலங்குகளாய் எண்ணி இங்குள்ள அடிமைத் தமிழ் மக்கள் அவர்களை இழிவாக நடத்துவதும், அவர்களை "அகதி" என்னும் பெயர் கொடுத்துத் துன்புறுத்துவதும், பெண்டிரை ஏமாற்றிப் பெண்மையைப் பறிப்பதும் நாடொறும் நடந்து வரும் செயல்கள். இங்குள்ள எல்லா அரசு அலுவலகங்களும் ஏன் அஞ்சல் நிலையம் உட்பட அவர்களிடம் ஏமாற்றிப் பணம் பறித்து வருகின்றன. பல் பொருட்கள் காவல் துறையினரின் துணையோடு திருடப்படுகின்றன. கண்ணுற் கண்டாலும் அவர்கள் பொருள் அவர்கட்குத் திரும்பக் கிடைக்காததோடு மாறாக அடித்துத் துன்புறுத்தப்படுகின்றனர். என்றோ அமெரிக்காவில் சந்தையில் மக்கள் வணிகம் நடந்ததாம். அதைவிட ஒருபடி மேலாகவே சென்று இந்த இழிந்த தமிழர் ஏதிலித் தமிழரைத் துன்புறுத்தி வருகின்றனர். மொத்தத்தில் அவர்களை மாந்தர்களாகவே மதிப்பதில்லை. இந்த மண்டபம், முகாம் கயமைகளின் பாசறையாக உள்ளது. நம்மிடம் புறப்பகை அவ்வளவாக இல்லை. அகப்பகை தான் நம்மை அழிக்கும் கொடிய நோய். அதை முதலில் போக்கியாகல் வேண்டும். தமிழ்நிலம் அந்த பணியைச் செய்யட்டும்"— என்று நம்முகவை மாவட்டச் செய்தியாளர் மெய். அருண்மொழியன் எழுதுகிறார்.

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி 1 | 28-11-82—இதழ் எண்: 4 | பகுதி 4

ஆசிய விளையாட்டிலும் இந்தித் திணிப்பு!

தில்லியில் நடைபெற்றுவரும் ஆசிய விளையாட்டுகளிலும் இந்தித் திணிப்புக் கொள்கையை நடுவண் அரசு விடாப்பிடியாகக் கடைப்பிடித்து வருவது பெரிதும் வருந்தத் தக்கதும் கண்டிக்கத் தக்கதுமாகும்.

ஆசிய விளையாட்டுப் போட்டிகள் ஆசிய நாடுகள் அனைத்துக்கும் பொதுவான ஒரு விளையாட்டு விழாவாகும். இப்பொழுது நடைபெறும் விளையாட்டு விழாவில் முப்பத்து நான்கு நாடுகள் கலந்து கொள்கின்றன. ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் பங்கு கொள்ளும் விழா இது. இந்தியநாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களிலிருந்தும் அனைத்து ஆசியநாடுகளிலிருந்தும் இவ்விளையாட்டு விழாவை வேடிக்கை பார்ப்பதற்கென்று, பல இலக்கம் பேர்கள் தில்லியில் கூடியிருக்கின்றனர். பல கோடிப் பேர் உலகெங்கணும் இவ்விழாவேடிக்கைகளைத் தொலைக் காட்சியிலும், வானொலியிலும் கண்டும் கேட்டும் களிக்கின்றனர்.

இந்நிலையில், ஓரளவு உலகப் பொதுவிழாவாக அமைந்த இதன் நடவடிக்கைகளை ஆங்கில மொழியில் வெளிப்படுத்தாமல், தில்லியரசின் இந்தி வெறியர்கள் இந்தியில் வெளிப்படுத்துவது மிகவும் கொடுமையானதாகும்.

இந்தியில் தான், வரவேற்பு! வாழ்த்துகள்! செய்தி விளக்கவுரைகள்! ஏன், இது போலும் பொது விழாக்களில் ஆங்கிலத்தைப் பயன்படுத்தினால் என்ன? முழு நேரமும் இந்தி விளக்கவுரைகள் எதற்கு? விழாவில் பங்கு கொண்டிருக்கும் நாடுகள் உலகப் பொதுமொழியாகிய ஆங்கிலத்தில் விளக்கவுரைகள் சொல்லப் பெறுவதையே வரவேற்கும்; இந்தி அவர்களுக்கு எந்த அளவில் விளங்கும்?

ஒரு செயலில் பயனே பெரிதும் கருதத் தக்கது. ஆங்கிலம் ஓர் உலகப் பொது மொழி என்றுள்ள பொழுது, உலகப் பொது விழா நிகழ்ச்சிகளை ஆங்கிலத்தில் நடத்துவதுதானே சிறந்தது; நாணயமானது; பண்பாடு மிக்கது; பயனுள்ளது வேற்று நாட்டு விருந்தினரையும் மதிப்பது; மகிழ்விப்பது!

அப்படியிருக்க இந்தியில் நிகழ்ச்சிகளை நடத்துவதும், செய்தி விளக்கங்கள் தருவதும் எதைக் காட்டுகின்றன? இந்தி வெறியரின் வல்லாண்மையை, ஆட்சி அதிகாரத்தையன்றோ காட்டுகின்றன. இத்தகைய வெறிப் போக்கைக் காலத்தால் தடுத்து நிறுத்தாமல் போனால், இந்தியை நாட்டின் எல்லாச் சந்து பொந்துகளிலும் நுழைக்கத் தொடங்கிவிடுவார்கள் வடவர்கள் என்பது இந்த விழா நிகழ்ச்சியினால் தெளிவாக விளங்கி விட்டது! இதற்கொரு முடிவு தான் என்ன?

தென்னாட்டினர், குறிப்பாகத் தமிழர்கள் இளித்தவாயர்களாக இருக்கும் வரை, இதுவும் நடக்கும்; இன்னமும் நடக்கும்! என்றைக்குத்தான் நம்மவர்கள் உணர்வு பெறப் போகிறார்களோ? அன்று தான் நாம் உரிமை பெற்ற மக்களாக இருக்க முடியும்! அதுவரை நாம் அடிமைகள் தாம்!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டவர்கள் என்னும் பிரிவுகளடிப்படையில், ஒட்டு மொத்தமான சலுகைகள் பெற அரசியல் தலைவர்கள் முயற்சி மேற்கொள்ளுதல் வேண்டும். அது தொடர்பாகச் சிந்தித்து ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டும்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தமிழர்களிடையே இருந்துவரும் ஒற்றுமையின்மைக்கும் ஒருவரையொருவர் காட்டிக் கொடுக்கும் கீழறுப்பு உணர்வுக்கும், வீடணத் தன்மைக்கும், அவற்றால் ஏற்பட்ட முன்னேற்ற மின்மைக்கும் சாதியமைப்புகளே தலையாய காரணமாகும்!

பார்ப்பனீயச் சூழ்ச்சிகளை நன்கு விளங்கிக் கொண்டவர்களும், தமிழின முன்னேற்றத்திற்கு உண்மையாகவும் உறுதியாகவும் உழைக்க விரும்புபவர்களும், பார்ப்பனீயம் வகுத்த மக்கள்பிளவுக் கொள்கையான சாதியமைப்புகளை, எந்தக் காரணத்துக்காகவும், தற்காலிகமாகக்கூட ஏற்க விரும்ப மாட்டார்கள்; விரும்பவும் கூடாது என்று அனைத்துத் தமிழ் மக்களுக்கும் எச்சரித்துக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்'— இவ்வாறு பாவலரேறு அவர்களின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

தமிழ் நிலம்

சிறப்பாசிரியர் :

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கண்ணிய ஆசிரியர் குழு (Hony. Editorial Board)

பொறுப்பாசிரியர் :

வினைவேந்தன், சென்னை-5.

உறுப்பாசிரியர் குழு :

1. 'தமிழம்' செம்பியன், சென்னை.
2. பாவலர். முல்லைவாணன், சிங்கை.
3. ந. முத்துக்குமரன், அறி.இ பல்லடம்.
4. இரா. ந. வீரப்பன், மலேசியா.
5. சொல்லாய்வறிஞர். ப. அருளி, வணி.இ.ச.இ., புதுவை.
6. சுப. சுப்பிரமணியம், அந்தமான்.
7. மா. பூங்குன்றன், க.மு. சென்னை.
8. ப. மணிசேகரன், மே. செருமானி.
9. அ. பு. திருமாலன், மலேசியா.

புரப்பாசிரியர் குழு :

1. மா. ஆறுமுகம், பல்லடம். 2. ப. துரையரசன், திருப்பூர். 3 சுப திருமாறன், நெய்வேலி 4. நாரா. மகிழ்நன், திருச்சி. 5. கோ. உளங்கவரழகன், இராசிபுரம் 6 புலவர். கா. இளமுருகன், க மு பு, புளியம்பட்டி 7. நா இளமாறன், பவானி. 8 சோ. தமிழ்மகன், கோவை. 9. கு. மேழிவளவன், அ பள்ளிப்பட்டி. 10. க. ஆகுன்றன், திருவள்ளூர் 11. புலவர். மு. ஆறுமுகம், க மு., சாத்தனூர். 12. பா். பொ இளங்கோ, ஈரோடு 13 இரா. இளம்பிறைச்செல்வன், (பாலகங்காதரன்) பொறி இ திருச்சி 14 மருத்துவர் ஆ விசுவநாதன், சின்னசேலம். 15. த கரிகாலன், கடையநல்லூர் 16 பாவலர் சா சி. சுப்பையா, ஈப்போ, மலேசியா 17 ச இறைவாணன், சிங்கப்பூர் 18. பாவலர் முத்துப்பாண்டியன், பெராக் மலேசியா 19 அ தங்கராசன், ஈப்போ, மலேசியா. 20. க.சச்சிதானந்தன், தென்னேமன், ஏடன்.

கட்டுரையாசிரியர் குழு :

1. பன்மொழிப் புலவர். கா. அப்பாத்துரையார், க. மு. சென்னை.
2. பேரா. கு.வெ.கி. ஆசான், க.மு. கோவை.
3. மெ. சிதம்பரனார், துணையாசிரியர், 'தமிழ்முரசு' சிங்கப்பூர்.
4. பண்டிதர். க. பொ. இரத்தினம், இலங்கை.
5. சிந்தனைச்செம்மல். கு. ச. ஆனந்தன், வணி. இ. ச. இ., கோபி.
6. ஆட்சிமொழிக்காவலர். கீ. இராமலிங்கனார், க.மு. சென்னை.
7. பேரா. பர். க. ப. அறவாணன், சென்னை.
8. பேரா. இல. க. இரத்தினவேலு. மதுரை.
9. ப. பத்மநாபன், க. மு. ச. இ. சோமனூர்.
10. புலவர். ச. சிவசங்கு, ஏரல்.
11. மருத்துவர். கோ. கோவிந்தனார், சென்னை.
12. புலவர். தி. நா. அறிவுஒளி, க. மு., திருக்கழுக்குன்றம்.
13. பேரா. ம. அரங்கசாமி, கோபிசெட்டிபாளையம்.
14. பர். தாயம்மாள் அறவாணன்., செனகல்.
15. பேரா. சதாசிவம், க. மு., ஈரோடு.
16. புலவர். பொதிகைச்செல்வன், க. மு.
17. அறிஞர். குணா, வெங்காலூர்,
18. கோ. மு. பெருமாள், அறி. இ. சென்னை.
19. சி. அரசிறைவன், அறி. இ., தஞ்சாவூர்.
20. செம்பியன் வல்லத்தரசு, சென்னை.
21. பாவலர். பெ. மணிவேலன் க. மு., அரூர்.
22. அ. தெ. தமிழநம்பி, விழுப்புரம்.
23. க. குழந்தைவேலன், க.மு. சென்னை.
24. பாவலர். கடலூர். மணிமாறன், க. மு. திருச்சி.
25. த. அன்பழகன், மஞ்சள் நீர் காயல்.
26. இரா. பாவாணன், புதுக்கோட்டை
27. தி. குமரப்பன், க. மு. மதுரை.
28. பாவலர்.ம. நிறைவாணன்,வேலூர்.
29. இரணியன், க. மு. கோவை.
30. பர். ஆறிறைவன், சென்னை.
31. 'தமிழ்ச்சுடர்' மணிமுத்து, அறி. இ., பழனி.
32. உமாமகேசுவரன் (முகுந்தன்) இலங்கை.
33. மருத்துவர் சோ. இராசசுந்தரம், கொக்குவில், இலங்கை.
34. புலவர். நாவை-சிவம் மணப்பாறை
35. மாசி அண்ணாமலை, குவாலலம்பூர்.

செய்தியாசிரியர் குழு :

1. புலவர்.பொன். முகிலன், கூவலூர். 2. கி இளஞ்சேரல் முதுபாண்டியன்,மின்பாறை 3, ச சின்னத்துரை, நெய்வேலி. 4. தென்னவனகோ, நெல்லை. 5. ப. முருகவேள். சென்னை. 6. குமர. தன்னொளியன், பாகாயம். 7. மு. உலகமுதல்வன், திருவண்ணாமலை, 8. கோ. நக்கீரன், சோளிங்கபுரம். 9. ம. செ. தமிழ்மணி, நெமலி. 10. புலவர். ந. அ. அண்ணாமலை, ஆலங்காயம். 11. புலவர். இரா. தமிழ்வேந்தன், எழில், இறையூர். 12. புலவர். கு. அண்டிரன், சின்னச்சேலம். 13. பொற்செழியன், வெங்காலூர். 14. குழந்தை. ஈகவரசன், திருச்சி. 15. த. தமிழ்த்தென்றல், தஞ்சை. 16. மு.பழ. சதாசிவம், சேலம். 17. அரங்க. தமிழ்மணி, கோவை. 18. க. தமிழப்பன், திருப்பூர். 19. செ. வ. புகழேந்தி, கள்ளக்குறிச்சி. 20. பால். இறையொளியன், தாராபுரம். 21. வி. சே. வேலிறையன், வி. க வலசு 22. நிலா. வேங்கடவன், ஈரோடு 23. புலவர். இரா. சிவசண்முகம், முகவை. 24. தெ. சாலமகன்அரசு, விருதுநகர். 25. மு.பெ. பறம்பை அறிவன், பரமக்குடி. 26. கல்லை. பெருஞ்சித்திரன், கல்லுப்பட்டி. 27. சங்க. தமிழ்ச்செல்வன், திருக்குறுங்குடி. 28. புலவர். ந.இரா. தமிழவேள், நரசீபுரம். 29. கோ. ப. சீரங்கசாமி, கோவை. 30. திரு. தாமரைக்கோ, க. இ. முத்தரையர் பாளையம். 31. இரா அறிவின்பன், அந்தமான். 32. நா. தமிழவேள், பழங்கரை. 33. திரு. விழுப்பரையன், விழுப்புரம். 34. சி தமிழ்க்குமரன், கீரமங்கலம் 35. புலவர். தே. வே. சந்தானம், அரூர் 36 துரைமடங்கன், கோவை. 37 இரா கழராம்பன், திண்டுக்கல் 38 அ. தமிழன்பன், கடையநல்லூர். 39. மு. குமரிச்செல்வன், மணவாளக்குறிச்சி 40. தா. மு தமிழ்ப்பித்தன், குமரி. 41. மு. சிதம்பரநாதன், உதகமண்டலம். 42 சா. தங்கராசு, குவாகம் 43 புலவர். ஆ. முகிலன், சிதம்பரம். 44 மெய் அருண்மொழியன், பெருவயல். 45. புலவர். ஆ. பு. கலிங்கனார், தா. வாடிப்பட்டி. 46. அ. எழிலன்பன், கண்டராதித்தம் 47. புலவர் க தூக்கிய திருவடியார், உளுந்தூர்ப்பேட்டை. 48 அ. பெ வளர்தமிழ் அறிவன், பேட்டைவாய்த்தலை. 49. புலவர். ந. தமிழவேள், க.மு. திருக்கோயிலூர், 50. வி. திருவள்ளுவன் இராசத்தான். 51. க மு குணசேகரன், இரங்கூன். 52. செல்லையா, கலிபோர்னியா. 53 சி. கோபாலக்கிருட்டிணன், சவுதிஅரேபியா. 54. சு. சுப்பிரமணியன், அபுதாபி. 55. முரு. குழ. வீரசிங்கம், இலண்டன், 56. நாரண திருவிடச்செல்வன், மலேசியா. 57 ஈழவேந்தன், கொழும்பு 58. தியாகேசுவரன்,பிரான்சு. 59.புட்பரதம், மொரிசியசு 60. எம். ஏ சுவாமி, மணிலா. 61. ந. சிவலிங்கம், கனடா. 62. சி. தியாகராசா, நார்த்விச் (U.S.A) 63. மு. சிரீராமலு, இந்தோனேசியா, 64 உமாகாந்தன், பாரிசு. 65. க. சின்னப்பன், டர்பன். 66. பாவலர். காசிதாசன், கோலாலம்பூர்.

விளம்பர ஆசிரியர் குழு :

1. சி. இமையவரம்பன், திருச்சி.
2. சோ. ஆற்றலரசு, சென்னை-5.
3. துரை-தென்னவன், சென்னை-19.
4. செ. கண்ணன், சென்னை-5.
5. சு. இளங்கோவன், திருச்சி.
6. அழ. இளமுருகன், சென்னை-5.
7. மா. பொழிலன், சென்னை-5.

ஓவிய ஆசிரியர் குழு :

1. ப. அறவாழி, உடுமலைப்பேட்டை, 2. வி. சின்னையன், சென்னை.

★ உண்மையைக் கூறி ஓர் இதழ் நடத்துவது நம்நாட்டில் கடினமான செயல்!

★ தமிழ்மொழி வளர்ச்சியில் 'தென்மொழி'யின் தொண்டு பெரியது; பெருமை மிக்கது!

★ பலகட்சிகளாகப் பிரிந்து, வலிவற்ற நிலையில் தமிழினம் உள்ளது!

'தமிழ் நிலம்' வெளியீட்டு விழாவில் பாவலரேறு உரைத் தொடர்ச்சி!

சென்னை, நவம்பர்—28.

உ. த. மு க. செய்தியிதழாகிய தமிழ் நிலம் வெளியீட்டு விழாவில் பாவலரேறு அவர்கள் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது :

பெரியோர்களே! இந்தத் "தமிழ் நிலம்" என்கின்ற இதழ் இன்றைக்கு வெளி வருகின்றது என்று சொன்னால், அந்த இதழ் அவ்வளவு எளிதாக வெளிவந்து விட முடியாது! முதலிலே ஓர் இதழ் நடத்த வேண்டும் என்றால், நடுவண் அரசு அந்தப் பெயரை இசைந்து, இசைவு தர வேண்டும். இந்தப் பெயர் இசைவு கேட்டு, ஒரு ஆண்டு ஆகிறது சட்டப்படி. ஓர் இதழ் நடத்த வேண்டும் என்று அரசை ஓர் இசைவு கேட்டால், இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள்ளே அது தரப்பட வேண்டும். இல்லையானால், நாம் அதற்காகப் போராடலாம். ஆனால், ஓராண்டாக அதற்குப் பல நிலைகளிலும் தடை செய்யப் பெற்று, அந்தப் பெயர் இங்கே கிடைக்காமல் இருக்கிறது என்ற நிலையை நீங்கள் அறிந்து கொண்டால், ஒரு பெயரை வைப்பதற்குக்கூட, நாம் நடுவண் அரசை எதிர்பார்த்துக் கிடக்க வேண்டியிருக்கிறது என்கின்ற அவல நிலை நமக்குத் தெரியும்! ஓர் இதழ். அது மக்களுக்குத் தொண்டு செய்கின்ற இதழ்! இந்த நாட்டிலே நடக்கின்ற அத்துணை இதழ்களும் மக்களுக்குத் தொண்டு செய்கின்றன என்று சொல்லிவிட முடியாது. இங்கே குறிப்பிட்டதைப் போல, பல வகையான நம்முடைய மதிப்புக்குரிய ஆறு. அழகப்பனார் ஒரு பட்டியலைக் கொடுத்தார். திரைப்படத்திற்கு என்று எத்தனை இதழ்கள் நடக்கின்றன. மக்களைக் கெடுப்பதற்கென்று எத்தனை இதழ்கள் நடக்கின்றன என்றெல்லாம் அவர்கள் பட்டியல் போட்டுக் காட்டினார்கள். அவர்கள் ஆராய்ச்சி நிறுவனத்திலே இருப்பதினாலே, அவர்களுக்கு நான் இந்த இடத்திலே இன்னொரு வேண்டுகோளை கூறிக் கொள்ள விரும்புகின்றேன். உண்மையாகவே தமிழகத்திலே நடக்கிற அந்த இதழ்களை அவர்கள் கணக்குப் போட்டு, ஒவ்வோர் இதழும் என்னென்ன அடிப்படையிலே நடக்கிறது. அந்த இதழினுடைய எண்ணிக்கை எவ்வளவு? அஃது இந்த நாட்டிலே எத்தனைப் பணங்களைச் சுரண்டிக் கொண்டிருக்கின்றன; அந்த இதழ்கள் மக்களை எந்தெந்த வகையிலே கெடுத்துக் கொண்டு இருக்கின்றன என்கின்ற ஒரு புள்ளி விளக்கத்தை எங்களுக்குத் தருவார்களானால், அதைக் கட்டாயம் நாங்கள் மக்களிடத்திலே முன் வைக்க விரும்புகின்றோம். எனவே நான் உங்களிடத்திலே சொல்லிக் கொள்ள விரும்புவது, ஓர் இதழ் நடத்துவது என்பது கடினமான செயல், அதுவும், உண்மையைச் சொல்லி ஓர் இதழ் நடத்துவது என்பது கடினமான செயல். அதுவும், உண்மையைச் சொல்லி ஓர் இதழ் நடத்துவது என்பதைப் போல, மிகக் கொடுமையான, தன்னைத் தானே அழித்துக் கொள்கின்ற ஒரு முயற்சியை நீங்கள் அறிந்திருக்க முடியாது. அப்படி இருந்துங்கூட, கடந்த 23 ஆண்டுகளாகத், "தென்மொழி" என்ற இதழை பல வகையான இடர்ப்பாடுகளுக்கிடையே நாங்கள் நடத்திக் கொண்டு வந்திருக்கின்றோம். அந்த இதழ், மொழி என்கின்ற அளவிலே, மக்களிடத்திலே ஒரு வகையான மறுமலர்ச்சியை உண்டாக்கியது! இன்றைக்கு அரசுத் துறையிலே, சில ஊர்ப் பெயர்கள் தமிழ்ப் பெயர்களாக மாறுகின்றன; மாற்றப் பெறுகின்றன என்று சொன்னாலும், அல்லது அரசுத் துறையிலே சில பெயர்கள் தூய தமிழ்ப் பெயர்களாக வைக்கப் பெறுகின்றன என்று சொன்னாலும் அந்தப் பெருமைக்கு ஓரளவாவது அடிப்படையை வகுத்தது தென்மொழி இதழ். அது, தென்மொழி இதழை அறிந்தவர்கள் தெரிந்து கொண்டிருக்கின்ற ஓர் உண்மை. ஏனென்று சொன்னால், முகவாண்மை, உயிர்முறிக்குழுமம், பேருந்து, இது போன்ற பல நிலைகளில் விரைவுப் பேருந்து, தொடக்கத்திலே 'துரித வண்டி' என்று அதை வைத்தார்கள். பிறகு தென்மொழியிலே, அப்படி அதை வைக்கக் கூடாது. அப்படி வைப்பதானால், தூய தமிழ்ப் பெயரை வைக்க வேண்டும் என்று, கடலூரிலிருந்து எழுதினோம்; உடனே, அதை "விரைவுப் பேருந்து" என்று மாற்றினார்கள். இப்படிப் பல நிலைகளிலே ஒரு மொழி மறுமலர்ச்சியைத் தென்மொழி உண்டாக்கியிருக்கின்றது. ஆயிரக்கணக்கான பேர்கள், தங்களுடைய பெயர்களை தூய தமிழ்ப் பெயர்களாக மாற்றிக் கொண்டதற்குத், தென்மொழி வரலாறு அடிப்படையானது. தென்மொழியிலே அந்தப் பெயர் மாற்றத்தையே தொடர்ந்து நாங்கள் வெளியிட்டுக் கொண்டு வந்தோம். ஏன், நான் இதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், எதையும் அமைதியாகச் செய்கின்ற பொழுது, நேர்மையாகச் செய்கின்ற பொழுது, கட்டாயம், அது மக்கள் மனத்திலே இடம் பெறுகிறது என்கின்ற உண்மையை நாம் மறந்து விடக்கூடாது. அதற்கு ஆரவாரம் தேவையில்லை; பெரிய பொருள் தேவையில்லை; பொருளை ஈட்டுவதற்குத்தான் பொருள் தேவை. மக்களிடத்திலே உண்மையான ஓர் உணர்வை வளர்ப்பதற்கும் பொருள் தான் ஒரு முகாமையான குறிக்கோள் என்று சொல்லிவிட முடியாது, உண்மையான உழைப்புத் தான் தேவை! அந்த உண்மையான உழைப்பை இந்த நாட்டுக்குத் தம்முடைய ஒப்பற்ற தொண்டின் மூலம் தந்த ஒரே ஒரு பெருந்தகை, தலைமைப் பேறு, மிகச் சிறந்த மாந்தப்பற்றாளர் தந்தை பெரியார், அவர்களுடையது தான். (கை தட்டல்) அவர்களைத் தொடர்ந்து, பல பெயர்கள் அறிவிக்கப் பெறுகின்றன. ஆனால், அவர்களையெல்லாம் நான் தவறாக நான் மதியாமல் இல்லை. மதிக்கின்றேன். ஆனாலும் கூட, அந்தப்பெரிய ஆலமரத்தினடியில், அவையெல்லாம் ஒரு சிறுசிறு செடிகளாக வளர்ந்தனவே தவிர, உண்மையான அந்த ஆலமரத்தினுடைய பயனை மேலும் விரிவாக்குவதற்கான முயற்சியிலே தங்களை அவர்கள் ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. 'தம்மின் தம்மக்கள் அறிவுடைமை, மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் இனிது' என்று திருவள்ளுவர் மக்களுடைய வளர்ச்சி தங்களை விட மிகுதியாக இருக்க வேண்டும். அந்த வளர்ச்சி அந்த தந்தைக்கும் தாய்க்கும் குடும்பத்திற்கும் பயன்படுவதை விட, உலகத்திற்கு மிகுதியாகப் பயன்பட வேண்டும் என்று சுட்டியிருக்கிறார். அப்படிச் சுட்டியிருக்கின்ற ஒரு நிலையிலே, தந்தை பெரியார் அவர்களுக்குப் பின்னால் அவருடைய முயற்சி பலமடங்காகப் பெருகியிருக்க வேண்டும். ஆனால், பல குழுக்களாகப் பிரிந்து விட்டது! அதை நான் வெளியிட்டால் மிக வருத்தப்பட வேண்டியிருக்கும்! எண்ணி எண்ணி நெஞ்சு நோக வேண்டியிருக்கும்! அதை, நம்முடைய பெருமைக்குரிய இராமலிங்கனார் அவர்கள் குறிப்பிட்டார்கள். பல கட்சிகளாகப் பிரிந்து ஒரு பெரிய வலுவற்ற ஒரு நிலையிலே தமிழினம் வளர்ந்து கொண்டிருக்கிறது. எற்கனவே, இதனுடைய பிரி[illegible]களுக்கு அளவில்லை. ஏரா[illegible]மான சாதி வேறுபாடுகள் இப்பொழுது அந்த சாதிகளை வலுப்படுத்துவதற்காகப் பல சாதிச்சங்கங்கள், சாதிக் குழுக்கள், சாதி அமைப்புகள் ஒவ்வொரு சாதியும் தங்களுக்கென்று உரிமையைக் கேட்கின்ற ஒரு நிலை வெட்கக்கேடானது. ஏன் ஒட்டு மொத்தமாகத் தமிழினமே தாழ்த்தப்பட்ட இனந்தானே! தமிழினமே, பிற்படுத்தப்பட்ட இனந்தானே! அதற்கு ஒட்டுமொத்தமான சலுகையை நாம் கேட்டால் என்ன? ஏன் தனித்தனியாக நாம், ஒவ்வொரு சாதிக்கும் தனித்தனியே சலுகையைக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும்?

இந்த நாட்டிலே இரண்டே இரண்டு இனங்கள் தாம்! ஒன்று, உயர்ந்த இனம்! இன்னொன்று, தாழ்ந்த இனம்! இதற்குள்ளே, தாழ்ந்த இனத்திலேயே ஓரளவு கொஞ்ச[illegible] தாழ்ந்த இனம், மிக[illegible] தாழ்ந்த இனம், மிகமிகத் தாழ்ந்த இனம் என்று பிரிந்து கொண்டு, அதற்[illegible] அடுத்த தாழ்ந்த இனத்[illegible] நாம் மேலே நின்[illegible] ஏவுகின்ற வல்லாண்மை செ[illegible]கின்ற நிலையைப் பார்த்தால் இதைவிட ஓர் இழிவான ஒ[illegible] தன்மை வேறு என்ன இருக்க முடியும்? இதை நீங்க[illegible]

(7-ஆம் பக்கம் பார்க்க)

தென்மொழியின் தனித்தமிழ் வெளியீடுகள்.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின்

புதுமுறை இலக்கியங்கள்

1.	எண்சுவை எண்பது	(அச்சில்)
2.	பாவியக்கொத்து (2 தொகுதிகள்)	(அச்சில்)
3.	ஐயை (முதல் பகுதி)	4—00
4	ஐயை (இரண்டாம் பகுதி)	5—50
5.	கொய்யாக்கனி (மறுபதிப்பு)	9—50
6.	கற்பனை ஊற்று - கட்டுரைகள் 1, 2	(அச்சில்)
7.	பள்ளிப் பறவைகள் (1-ஆம் பகுதி)	4—00
8.	பள்ளிப் பறவைகள் (2-ஆம் பகுதி)	(அச்சில்)
9.	மகபுகுவஞ்சி (மறுபதிப்பு)	(அச்சில்)
10.	கனிச்சாறு (முதல் தொகுதி)	15—00
11.	கனிச்சாறு (இரண்டாம் தொகுதி)	11—00
12.	கனிச்சாறு (மூன்றாம் தொகுதி)	17—50
13.	நூறாசிரியம் (முதல் பகுதி)	2—50
14.	நூறாசிரியம் (இரண்டாம் பகுதி)	3—00
15.	தன்னுணர்வு (மறுபதிப்பு)	1—50
16.	இளமை உணர்வுகள்	1—25
17.	பாவேந்தர் பாரதிதாசன்	(அச்சில்)
18.	இலக்கியத் துறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப்பணிகள்	1—25
19.	வாழ்வியல் முப்பது	0—75
20.	ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்	2—25
21.	உலகியல் நூறு	6—50
22..	அறுபருவத் திருக்கூத்து	(அச்சில்)

பிற வெளியீடுகள்

1.	செங்கள அமர்க்களம் (சொல்லாய்வறிஞர் ப. அருளி)	5—00
2.	இந்திச் சிக்கலும் இறுதித் தீர்வும் (சிந்தனைச்செம்மல் கு. ச ஆனந்தன்)	1—50

பிற விளக்கங்களுக்கு :

தென்மொழி, சென்னை-5. தமிழகம்.

தமிழ் நிலம் வெளியீட்டு விழாப் படங்கள்!



'தமிழ் நிலம்' இதழைப் பன்மொழிப்புலவர் வெளியிட, ஆட்சிமொழிக் காவலர் ஏற்கிறார்.



'தமிழ் நிலம்' வெளியீட்டு விழாவில் தென்மொழி. ந. முத்துக்குமரனார் வரவேற்புரையாற்றுகிறார்.



தீவிரப் பொதுவுடைமையாளர் திரு. க. வள்ளுவன் அவர்களுக்கு அமைப்புச் செயலர் மாலை அணிவிக்கிறார்.

ஆட்சிமொழிக் காவலர் கீ. இராமலிங்கனார் அவர்கள் ஏற்புரை ஆற்றுகிறார்கள்.

விடுதலைப்புலி முகுந்தன் (உமா மகேசுவரன்) வாழ்த்துரையாற்றுகிறார்.

புதுவை வழக்கறிஞர் ப. அருளி, தலைவரை வழிமொழிந்து உரையாற்றுகிறார்.



பேரா. பர். ஆறு. அழகப்பனார் இதழை வாழ்த்தி உரையாற்றுகிறார்.



பேரா. கு. வெ. கி. ஆசான் அவர்கள் 'தமிழ் நிலம்' இதழ்ச் சிறப்பை விளக்கி வாழ்த்துகின்றார்.



புலவர். இறைக்குருவனார் தமிழ் நிலம் இதழை வரவேற்றுச் சார்புரை செய்கிறார்.

கழக முதல்வர் பாவலரேறு, பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார், ஆட்சிமொழிக் காவலர், கீ. இராமலிங்கனார், பேரா. கு. வெ. கி. ஆசான் ஆகியோர் மேடையில் அமர்ந்திருக்கின்றனர். பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் அமர்ந்தவாறே தலைமையுரையாற்றுகிறார்.



இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் கொள்கை விளக்கப் பேருரை நிகழ்த்துகிறார்.

நிழற் படங்கள்: நாரா. மகிழ்நன்
மா. பூங்குன்றன்

'தமிழ் நிலம்' இதழை உலகெங்குமுள்ள ஆயிரமாயிரம் நெஞ்சங்கள் இருகைகள் நீட்டி வரவேற்று வாழ்த்துரைக்கின்றன !

● தயங்குத லின்றி முயன்றிடல் நன்றே
தமிழ்நிலம் செழித்திடவே !
தாக்குக உணர்வெனும் சூட்டுக் கோலினுல்
தமிழ் நிலம் விழித்திடவே !
—மேட்டுப்பட்டி கழராம்பன், திண்டுக்கல்-2.

● வாழ்க்கை உரிமையின் வித்தாக, உலகத்தமிழர்தம் உயர்ந்த சொத்தாக, ஒள்ளிய கொள்கை முத்தாக, மொய்ம்புற முகிழ்க்கும் இக்கிழமை யிதழின் தன்னலங் கருதாத் தனிப்பெந் தொண்டில் உண்மையுந் திண்மையும், உரனும். இனத்திற்கு அளவற்ற நன்மையும் கிடைக்கும் என்பதில் ஏதும் ஐயப்பாடின்று...தமிழர் இடையில் 'தமிழ் நிலம்' அறுகு போல் வேரூன்றி ஆல் போல் தழைத்து மலர்ந்து மணம்பரப்ப எளியேனின் நெஞ்சுகந்த வாழ்த்துகள் உரியவாகுக !
—பெரு. தமிழ்வேந்தன், பவானிசாகர்.

● அற்றைநாள் எய்திய அழிவிலா இசையினை
இற்றைநாள் மீட்கவும் இனமொழி காக்கவும்
நற்றமிழ்க் குமுகாயம் நானிலத் தோங்கவும்
புழுதி அரசியல் முழுவதும் நீக்கி
எழுதரும் தமிழ்நிலம் ஏற்புடைப் பண்பொடு
ஒல்காப் புகழொடு வளரவாழ்த் துவனே !
— இரா. ஆறுமுகம், நாககுப்பம்.

● 'தமிழ் நிலம்' சிறப்புற வந்து தமிழ் மக்களிடம் தளையறுக்க வல்ல விடுதலைக் கருத்தால் தவழ வளர வேண்டும் என்பது என்னுடைய உள்ளார்ந்த வேட்கை. இதில் உ. த. மு. க. முயற்சிகள் யாவும் வெற்றி பெற வாழ்த்துகின்றேன்.
— குணா, வெங்காலூர்.

● பண்டைநாள் கண்ட மாண்பும்
பகுத்தறி சிறப்பும் சால்பும்
மண்டிடும் கிழமை ஏடாய்
மலர்ந்திடும் 'தமிழ்நில'த்தைக்
கண்டிடும் வாய்ப்புப் பெற்ருேம் ;
களிப்புறும் வாழ்க்கைப் பேற்றைக்
கொண்டிடும் சிறப்புப் பெற்ருேம் !
கொற்றமே பெற்ருேம் ! வாழ்க !
— புலவர். செ. வரதராசன், கள்ளக்குறிச்சி.

● பேராளர் பெருஞ்சித்திர ஞரின்பெரு முயற்சியில்
காராளர் கடமையிலும் கருவாகிக் கனியாகி
உருவாகி ஓராண்டு நிறைவிற்குள்
உருப்பெற்ற தமிழ் நிலம் வாழிய வாழியவே !
— கல்லே. பெருஞ்சித்திரன், கெ. கல்லுப்பட்டி.

● நான் இதுகாறும் அரசியலில் நேரடியாகத் தொடர்பு வைத்துக் கொண்டதில்லை. எனினும் தாங்கள் தமிழ் மொழிக்கும், தமிழ் இனத்திற்கும் ஆற்றிவரும் அளவிறந்த தொண்டின் வகைகளையெல்லாம் நான் நன்கு அறிவேன். அறிந்து என்றும் பாராட்டி இன்புற்று வருகின்றேன்...என்னுடைய மன ஆதரவு முழுவதும் உண்டு.
—கோ. முத்து[ப்பிள்ளை] சென்னை-39.

○ குமரித்தமிழ் இனமீட்புக் காணு தற்கும்
முந்தியநம் புகழ்பெருமை மூளு தற்கும்
மூண்டெழுசீர் தமிழ்நிலமே நெடிது வாழி !
— பாவலர் முல்லைவாணன், சிங்கப்பூர்.

○ 'தமிழ் நிலம்' கிழமையிதழ் வெளிவர விருப்பது அறிந்து மகிழ்ந்தேன். இதழ் தாங்கொண்ட கொள்கைகளை மேலும் வளர்த்து இன, மொழி, நாட்டுத் தொண்டாற்றித் தமிழ் நிலம் சிறந்தோங்க வாழ்த்துகள் !
— இறைவாணன், சிங்கப்பூர்.

அன்பர்கள் கவனிக்க...

கழக முதல்வர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல் வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிருர்கள்.

— அமைச்சர்

○ தமிழ்வானில் 'தமிழ் நிலம்' எனும் பகலவன் தோன்று வதை எண்ணி இன்புறுகின்றேன்.
—ஒய். மணிகண்டன், மயிலாடுதுறை

○ கொற்றங் கண்டு குடிப்புகழ் நிறுவிடக்
கூற்றுக வாளாகக் கூர்வில் அம்பாக
இன்றே இமைப்பே வருக
நற்றமிழ் நிலத்தை நாமாண் டிடவே !
— புலவர். பழ. தமிழாளன், க. இ: செவல்பட்டி.

○ குனிந்து குனிந்து மண்ணோடு மண்ணாய் ஒட்டி மட்கி மடிவதைப் பார்த்துப் பொறுது எப்படியும் இவர்களைக் கடைத் தேற்ற வேண்டும் என்ற வேட்கையால் இந்த இதழை வெளியிடுகின்றீர்கள். தமிழக விடுதலை வரலாற்றில் அழியாத பெயர்களாக உங்கள் பெயரும், உங்கள் தமிழ் நிலமும் நிலைத்து நிற்கும்.
— மெய். அருண்மொழியன், கடல் மீன்வளம்.

○ 'உலகத் தமிழரை ஒன்று கூட்டுவேன் ; அவர் உள்ளங்களில் தமிழ் என்னும் யாழை மீட்டுவேன்' என்று உறுதியிட்டு, நவம்பர் திங்களில் உ. த. மு. க. நிறுவினீர்கள். அதனுடைய செய்தியிதழாகத் 'தமிழ் நிலம்' வருதலறிந்து அகம் மிக மகிழ்ந்தேன். தமிழ் நிலம் நன்கு பக்குவப்படுத்தப்பட்ட நிலம். அதில் விழும் விதைகளும் அப்படிப்பட்டவையே. அவற்றில் களைகள் வளராமல் பாதுகாத்து நம் உலகத் தமிழர்களை ஒன்று திரட்டும் இதழாக அமையும் எனக் கனவு காண்கிறேன். அது நனவாகும் என நம்புகிறேன்.
சு. ஆறுமுகம். புத்தனும்பட்டி.

○ 'தமிழ் நிலம்' உலகின்கண் வாழும் தமிழ் மக்களுக்கு உள்ளுணர்வு ஊட்டி மேம்பாடடைய உறுதுணையாக இருந்து வாழ்க பல்லாண்டு என மனமுவந்து வாழ்த்துகிறேன்.
—இ. முத்துசாமி. தெய்வநாயகப்பேரி.

○ தமிழினம் ஒன்றுபட இவ்விதழ் உறுதுணை புரியும், நலம் பெற வழி வகுக்கும் என்று நம்புகிறேன். தங்களின் தமிழினத் தொண்டு இந்த நூற்ருண்டின் இறுதிக்குள் தமிழர்களிடையே விழிப்புணர்ச்சியையும் மறுமலர்ச்சியையும் உருவாக்கும்.
—சி. செந்தமிழ்வாணன். கீரனூர்.

○ செந்தமிழ்ப் பண்பினம் சீர்படத் தோன்றும்
'தமிழ் நிலம்' வாழி! விடுதலை வித்தே!
நினைந்துபா ஞூட்டும் பெருந்தாய்! அருந்தலைவ
நண்ணும் விளைவலர வாழ்த்து!
—புலவர். கோ. தேவராசு வழக்கறிஞர்
திருப்பத்தூர், வ. ஆ.

★ 'தமிழ் நிலம்' வெளிவந்து இவ்வுலகத் தமிழினத்திற்குத் தொண்டுகள் பலவாற்றும் என நம்பி வாழ்த்துகின்றேன்.
—தென்னவன்கோ, கோட்டூர்.

★ தரமுள்ள தமிழரின் செயலாலே
தமிழர் ஆட்சி மலர்ந்திடுமே!
தங்கத் தமிழர் ஒன்றிணைந்தே
தமிழர் நிலம்வழி மண்மீட்போம்!
—ம தே. தமிழன். இங்கிலாந்து.

★ இந்தியப் பேய்க்கண் ணிருந்து விடுதலை
நந்தமிழ் நாட்டையப் போர்த்துணையாய்ச்—
சிந்தைநல்லீர்
தூய'தமிழ்நிலம்' தோற்றுவித்தீர் நம்பிக்கை
ஆயதோற்றம் நீரே தமிழ்க்கு.
—க. இராயவேல், அறி.இ. சென்னை-21.

★ வரலாறு படைக்கப் போகும் தமிழ்நிலம் ஆல்போல் தழைத்துப் பல்கிப் பெருக வாழ்த்துகிறேன். அதற்கான எல்லா முயற்சிகளிலும் ஈடுபடுவேன் என்றும் உறுதி கூறுகிறேன்.
—வி. சீத்தலைசாத்தனார். உளுந்தூர்ப்பேட்டை.

★ 'தமிழ் நிலம்' வெளியீட்டன்று தாங்கள் நிகழ்த்திய கொள்கை விளக்க உரை செவியுற்று மெய்சிலிர்த்தேன். தமிழகம் விடுதலை பெற்ருக வேண்டுமெனும் என் போன்ரேர் கருத்துக்கு உயிரூட்டமும் செயல் வேகமும்

(8-ஆம் பக்கம் பார்க்க)

ஆசிரியருக்கு ஒரு கடிதம்

மேல்சாதியார் தந்திரங்கள்

அய்யா,

தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பிற்பட்ட வகுப்பினருக்கும் இட ஒதுக்கீடு என்னும் திட்டத்தைத் தமிழக அரசு அரைகுறையாகச் செயற்படுத்தி வருகிறது. அதற்குள்ளேயே, இட ஒதுக்கீட்டுத் திட்டத்தைக் கரம்பிக் கரைத்திடும் திட்டங்களில் இந்நாட்டு மேல் சாதிக்காரர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகிருர்கள். அவர்களின் (வஞ்சகத்) திட்டங்கள் எந்தெந்த வடிவங்களை எடுக்கின்றன என்பதைப்பார்க்கிற போது யாரும் வியப்பு அடையாமல் இருக்க முடியாது,

நவம்பர் மாதம் 13 ஆம் பக்கல் மாலையில் . சென்னையில் புத்தக வெளியீட்டு விழா ஒன்று நடைபெற்றது. சிறந்த பேச்சாளர்களாகக் கருதப்படுகிற சிலர் அந்த விழாவில் பேசுவதாக அறிவிக்கப்பட்டிருந்ததால், நானும் கூட்டம் கேட்கச் சென்றிருந்தேன். பேச்சுக்கள் நடக்க நடக்கத்தான், மேல் சாதிக்காரர்கள், அரசில் பெரிய பதவிகளைப் பிடிப்பதற்கு எவ்வளவு அழகாகத் திட்டமிட்டு வேலை செய்கிருர்கள் என்பது புரிந்தது.

வருணச்சிரம அமைப்பின் உச்சியில் இருக்கும் சாதியைச் சேர்ந்த ஒருவர் எழுதிய புத்தகத்துக்கு வெளியீட்டு விழா, அரசில் ஓரளவு சாய்கால் உள்ள ஓர் அமைச்சரின் தலைமையில் ஏற்பாடு செய்திருந்தார்கள். புத்தகத்தை எழுதியவர் நடுவண் அரசில் பெரிய பதவியில் இருப்பவர். இன்னும் ஒரு மாதத்தில் அவர் ஒய்வு பெறப் போகிருராம். (பேச வந்த எல்லாரும், மறக்காமல் இதைச் சொன்னர்கள்.) புத்தகத்தைப் பற்றிப் பேசியதைவிட அவருடைய சாதியை மீறிய பரந்த மனப்பான்மை, அவருடைய மாந்தத்தன்மை, சமசுக்கிருதக் காதலையும் மீறிய அவருடைய தமிழ்க் காதல், தமிழைக் காப்பாற்ற அவர் கட்டாயம் தமிழக அரசில் பதவி பெறவேண்டும் என்ற உருக்கமான வேண்டுகோள் இவற்றையே, எல்லாரும், பிணையல் மாடுகள் போல், வளைத்து வளைத்துப் பேசிக் கொண்டு இருந்தார்கள்!

இந்தப் புகழ்ச் சேகண்டியைக் கேட்கக் கேட்கத்தான், கோட்டையில் அல்லது தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ஒரு பெரிய பதவியில் இவரை அமர்த்துவதற்காகவே, தமிழக அமைச்சரை எல்லாரும் குழை அடிக்கிருர்கள் என்பது தெளிவாக விளங்கியது. வீட்டுக்குப் போக வேண்டிய மேல் சாதிக்காரர்களை அழைத்து உட்கார வைத்து மேல் சாதியார் நலனைப் பேணுவதற்கு. என்றே தில்லியில் ஒரு தமிழ் நாடு இல்லம், தஞ்சையில் ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகம் கோட்டையிலே தமிழ்ப் பண்பாட்டு மைய நிலையம், தமிழாக்கத் துறை போன்றவற்றை அரசு நடத்தி வருகிறது.

தாழ்த்தப்பட்டோரிலும் பிற்படுத்தப் பட்டோரிலும் பலபேர் வேலை வாய்ப்பும் வளர்ச்சி வாய்ப்பும் இல்லாமல் வெளியே நிற்கும்போது,

(8-ஆம் பக்கம் பார்க்க)

தொடர் : 4

இந்த இருபதாம் நூற்றுண்டின் நடுப்பகுதியிலே செய்யப்படும் சோவியத் நாட்டு பயணக் கப்பல்களும், சரக்குக் கப்பல்களும், குறைந்த அளவு நான்கு மணி நேரத்துக்குள் சண்டைக் கப்பல்களாக மாற்றக்கூடிய தன்மை வாய்ந்தவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

முதல் முதலில் கி.பி. 1638இல் மட்டக் கடப்பையும் (BATTICALO) கி.பி. 1656இல் கொழும்பையும் கைப்பற்றித் தங்கள் ஆட்சியின்கீழ்கொண்டுவந்தஒல்லந்தர் கி.பி.1558இல் யாழ்ப்பாணத்தைத் தாக்கி வெற்றி பெற்றனர். படிப்படியாகப் போர்த்துக்கேயரை இலங்கைத்தீவில் இருந்து விரட்டி அடித்த ஒல்லாந்தரால், கண்டி அரசையும், கைலாய வன்னியனின் ஆட்சிக்குட்பட்ட தமிழீழ வன்னி ஆட்சியையும் கைப்பற்ற முடியவில்லை. இந்த அரசுகள் மாற்றுனை எதிர்த்துத் தனித்தனி தன்னுட்சி செலுத்தி வந்தன.

மன்னர் முதல், திருகோணமலை, மட்டக்கடப்பு (BATTICALA) வரை இலங்கைத் தீவின் ஐந்தில் ஒரு நிலப்பகுதியும், மூன்றில் ஒரு கடற்பகுதியும் கைலாய வன்னியனின் ஆட்சிக்குட்பட்ட வன்னி ஆட்சி என்பதனை வரைபட ஆதாரங்களுடன் (MAP) 'ரேபேட் நொக்சு' (ROBERT-KNOX) நிறுவியுள்ளார். இவர் கி. பி. 1679 வரை பத்தொன்பது ஆண்டுக்காலம் கண்டி அரசனால் கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்ட ஆங்கிலேயர் ஆவார். இவர் 1679இல் பிரித்தானியாவுக்குத் தப்பியோடியபின் இலங்கைத்தீவு வாழ்வு பற்றிய தனது விரிவான நூலில் கைலாய வன்னியன் நாடு பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் தீவுக்கு வந்து சென்ற மேற்கத்திய அறிஞர்களாகிய,

- ரேபேட் நொக்சு (Robert - Knox) கி. பி. 1660
- அட்றியன் இரேலன்ட் (Adrean Reland) கி.பி. 17ஆம் நூற்றுண்டு
- கிரித்தோபர் சுவைட்சர் (Christopher Schewitzer கி.பி. 17ஆம் நூற்றுண்டு

இவர்கள் தங்கள் குறிப்புகளில்

- "இலங்கைத் தீவில் தமிழர்கள், சிங்களவர்களைவிடச் சிறந்த பண்பாடு, நாகரிகங்களைக் கொண்டிருந்தனர்" எனவும்,
- "தமிழர்கள் ஒரு தனியான நாட்டினமாக வாழ்கிறுர்கள்" எனவும்,
- "தீவில் வாழும் சிங்கள நாட்டினமும், தமிழ் நாட்டினமும், மொழியால் மட்டுமல்லாது, வாழ்வு முறை பண்பாடு, நீதி, அரசாட்சி முறை ஆகிய எல்லா வழிகளிலும் வேறுபட்டிருந்தன" எனவும்,
- "இவ்விரு நாட்டினங்களும் பிரித்தறியக்கூடிய, வரையறுக்கப் பெற்ற எல்லைகளைக் கொண்ட தனித்துவமுடைய நிலப்பகுதிகளைக் கொண்டிருந்தன" எனவும்
- "மேற்கே சிலாப நகரை உள்ளடக்கி மகா ஆறு (Maha Aru) தொட்டு, வடக்கே யாழ்ப்பாணம் வன்னியை உள்ளடக்கிக் கிழக்கே, திருகோணமலை, மட்டக் கடப்பு, பொத்துவில், கதிர்காமம் உள்ளடக்கி வளவ கங்கைவரை தமிழர்கள் செழித்து வாழ்கின்றனர்" எனவும் எழுதியுள்ளார்கள்.

கி. பி. 1795 வரை இலங்கையை ஆட்சி செய்த ஒல்லாந்தரினுல், கண்டி, வன்னி ஆட்சிகளைத் தவிர்ந்த ஒல்லாந்தர் ஆட்சிக்குட்பட்ட கரையோரப் பகுதிகள் அனைத்தும் ஆறு ஆட்சி மாவட்டங்களாகப் பிரிக்கப் பெற்றுத் தனித்தனி ஆட்சித் தலைவரின் பொறுப்பில் ஆளப் பெற்றன அவற்றுள்,

- புத்தளம்—கற்பிட்டி ஆட்சி மாவட்டம்
- யாழ்ப்பாண ஆட்சி மாவட்டம்
- திருகோணமலை ஆட்சி மாவட்டம்
- மட்டக்களப்பு ஆட்சி மாவட்டம்

ஆகிய நான்கும் தமிழ் மாவட்டங்களாகவும்

- கொழும்பு ஆட்சி மாவட்டம்
- காலி ஆட்சி மாவட்டம்

ஆகிய. இரண்டும் சிங்கள மாவட்டங்களாகவும் ஆளப் பெற்றன. இதனுல் தமிழர்கள் பிறநாட்டினரின் ஆளுமைக் குட்பட்ட காலத்திலும் தனிநாட்டினமாகத் தனித்தே ஆளப்பெற்றனர்.

தொடரும்...

'முகுந்தன்'
(உமாமகேசுவரன்)
தலைவர், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

உண்மையைக்கூறி...

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நன்றுக எண்ணிப் பார்க்க வேண்டும். நம்முடைய உள்ளத்திலே உண்மையான மறுமலர்ச்சி இன்னும் தோன்றவில்லை. உணர்ச்சி தோன்றவில்லை! சிந்தனை தோன்றவில்லை. எதையெடுத்தாலும், நாம் நமக்கு அதிலே ஏதாவது ஊதியம் வருகின்றதா என்று கருதித்தான், பார்க்கிற வழக்கம் இயல்பாக நமக்கு அமைந்துவிட்டது. நமக்கோ அல்லது நம்முடைய வீட்டுக்கோ, அல்லது மதத்திற்கோ அல்லது நம் குலத்திற்கோ அந்த நிலையிலே நாம் சிந்திக்கின்ற எண்ணம் படிப்படியாக மாறவேண்டும். ஆனல் நம்முடைய எண்ணங்கள், இன்னும் சாதிகளைச்சுற்றி, மதங்களைச்சுற்றி, இனத்தைச் சுற்றி அதாவது எந்த இனத்தை மற்றவர்கள் எந்த ஒரு காரணத்தினல் அடிப்படையில்லாது தகர்த்தார்களோ அதையே நாம் இன்னும் போற்றிக் கொண்டிருக்கின்ற ஒரு நிலையிலே, இந்த இனம் எப்படி முன்னேறும் என்பதை நாம எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடுத்தது, நாம் இன்னென்றை நினைவிலே வைத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய இராமலிங்கனர் அவர்கள் அதை நன்றுகக் குறிப்பிட்டார்கள் 'தமிழ் நிலம்' என்கின்ற இந்த இரண்டு சொற்களிலே தமிழ் இருக்கிறது; அடுத்தது நிலம் இருக்கிறது இந்தத் தமிழுக்கும் நிலத்துக்கும் இடையிலேதான் இனம் இருக்கிறது. இந்த இனம் முன்னேற வேண்டுமானல், தமிழ் முன்னேறியாக வேண்டும். இந்த நிலம் என்கின்ற நாடும், அதனுடைய நிலையிலே உரிமை பெற்றுக வேண்டும், உரிமை என்று சொல்வது, எல்லா வகையான அடிமைத்தனங்களும் நீங்கிய ஒரு தன்மை! அது, என்னென்ன அடிமைத்தனங்கள் இருக்கின்றனவோ, அதையெல்லாம் பட்டியல் போட்டுப் பார்த்துக் கொள்ளலாம். நாங்கள் எந்த நிலைகளையும் வெளிப்படையாகச் சொல்லி போராடிக் கொண்டிருக்கின்றவர்கள்! எதையும் மறைமுகமாகச் சொல்ல கூடிய நிலையிலே இல்லை! அதை வெளிப்படையாகவே சொல்லிக் கொண்டு வருகின்றேம்! 'தென் மொழி'யினுடைய முகப்பிலே, பல தலைப்புகள் வெளிப்படையாகவே கொடுக்கப் பெறுகின்றன, எதற்குச் சொல்கின்றேன்! எதையும் மறைத்தோ, குறைத்தோ அதுவோ இதுவோ என்று யாரும் விளங்காமல் எங்களுடைய கொள்கைகளை நாங்கள் சொல்லி மக்களைத் திசை தெரியாத ஒரு நிலைக்கு இழுத்துக் கொண்டு போகின்ற ஏமாற்று நிலை எங்களிடத்திலே இல்லை!

உண்மையாக எங்களுடைய கொள்கை இது! இந்தக் கொள்கைக்குப் பாடுபடுகிறவர்கள் கட்டாயம் எங்களோடு ஒத்துழைக்கலாம், என்பது தான் எங்களுடைய வேலை! முடிந்தால் ஒத்துழையுங்கள்! முடியாவிட்டால் விலகி நில்லுங்கள்! உண்மையாகவே இது மக்களுக்காக உழைக்கின்ற ஒரு கட்சியாக அறிமுகப்படுத்தப்பட்ட கட்சி! அறிமுகம் செய்து கொண்ட கட்சி! இதிலே நீங்களும் சேர்ந்து கொண்டு உழைக்கலாம். எங்களையும் உழைக்க விடலாம்! இது உலகத் தமிழின முன்னேற்றக்கழகம். உலகம் தழுவிய அந்த இனத்தை எந்த வகையிலாவது ஒரு வகையிலே சிந்திக்கச் செய்வதற்கு செயலற்றச் செய்துவிட வேண்டும் என்கின்ற முயற்சியிலே தோன்றிய கழகம், இந்தக்கழகம்! மற்றபடி இது ஒரு வகையான அரசியல் பதவிக்காகவோ அல்லது வேறு வகையான ஊதியத்துக்காகவோ தோற்றுவிக்கப்பட்ட கழகம் அன்று! தமிழினம், ஐயா அவர்கள் தலைவர் அவர்கள் நாங்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்தபொழுது, தமிழினம் உலகத்திலே எத்தனை நாடுகளிலே இருக்கின்றன என்று ஒரு கேள்வியைக் கேட்டார்கள். அவர்கள் மிகவும் தமிழறிவு மட்டும் அன்று, மிகச்சிறந்த வரலாற்று அறிவும் பெற்றவர்கள்! ஆனல், இருக்கின்ற நிலை எப்படி இருக்கின்றது என்பதை அவர்கள் என்வாயிலாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக அவர்கள் இந்த கேள்வியைக் கேட்டிருக்கிறுர்கள் என்று நான எண்ணினேன். எனவே, ஏறத்தாழ 47 நாடுகளில் தமிழினம் இன்றைக்கு இருந்துகொண்டு இருக்கின்றது என்கின்ற இந்த புள்ளி விளக்கத்தை வரலாற்று ஆசிரியர்களின் தொகுப்பிலிருந்து அவர்களுக்குச் சொன்னேன்.

(தொடரும்)

ஒரு கருத்து மடல்!

தனித்தமிழ் பேசுபவர்கள் இழிவாகக் கருதப்படுவதற்கு நம் அரசும் அடிமைத்தனமுமே கரணியம்!

தமிழ்த்திரு ஐயா அவர்கட்கு வணக்கங்கள் பல பல, ஐயா, யான் தங்கள் தென்மொழி, தமிழ்ச் சிட்டியினுல் உருவாக்கப்பட்ட தனித் தமிழ்ப் பற்றுளன். ஆயின் தனித்தமிழில் பேசினுல் பலர், ஏன் ஐயா, இது சோறு போடுமா அல்லது உனக்கு மேன்மை நிலை தான் உருவாகுமா. நீ இப்படி இருக்கும் வரை உருப்பட மாட்டாய் என்று படித்தவரும், படிக்காதவரும் ஏசுகின்றுர்கள். இந்நிலைதான் இப்படி என்றுல் வணிகமுறைப்படி செயல்படும் இடத்துக்குச் சென்றுல் அங்கு அதாவது உணவு விடுதியிலிருந்து உழைப்பாளர் உலகம் வரையில் ஏதோ பித்துப் பிடித்தவனைப் பார்ப்பதுபோல் பார்க்கின்றனர்.

இப்படிப்பட்ட நிலைகளுக்கு முழுக்கரணியம், நமது அரசும், அரசியல் அடிமை நிலையும் தான் மூலக் கருவாகும் என எண்ணுகின்றேன். இந்த நிலைகளையெல்லாம் மாற்ற வந்த தமிழினக் கதிரவன் போல் மலர்ந்திருக்கும் 'தமிழ் நிலம்' காய்த்துக், கனியத் தான் போகிறது. அச்சோலையில் நாம் உலவிவரத்தான் போகிறேம். ஆயின் உள்ளன என்று நம்பேரினம் உணரப் போகிறது! நிற்க.

'தமிழ் நிலம்' மயிலை மந்தை வெளிப்பகுதிகளில் கிடைக்கப்பெறவில்லை. என்பதை நினைவுபடுத்த விரும்பியே இம்மடலை எழுதினேன்.

இவண்,
இரா. மதுரை
குயில் தோட்டம்,
சாந்தோம் நெடுஞ்சாலை,
சென்னை—4.

எழுத்தர்கள் தேவை!

தமிழ் நிலம் இதழ்ப் பணிகளை மேற்கொள்ள, தகுதியும் திறமையுமுள்ள எழுத்தர்கள் தேவைப்படுகின்றுர்கள். விரும்புவோர், தாம் எதிர்பார்க்கும் சம்பளத் தொகையையும், பிற விளக்கங்களையும் குறித்து, உடனடியாகத் 'தமிழ் நிலம்' இதழ்க்கு எழுதுக.

—அமைச்சர்.

அண்ணனும் தம்பியும்

"அண்ணா!"
"என்ன தம்பி?"
"தமிழ்நாட்டில் உள்ள அஞ்சலகங்களுக்கு வருவோரில் மிகப் பெரும்பாலோர் தமிழர்கள் தாமே?"
"ஆமாம்."
"அவர்கள் அறிந்து கொள்வதற்கு என்று தானே அஞ்சலகங்களில் பெயர்ப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன?"
"அமாம்."
"அப்படி வைக்கப்பட்டிருக்கும் பெயர்ப் பலகைகளில் தமிழ் முதலிடம் பெறுவது தானே முறை?"
"ஆமாம்."
"ஆனால் இந்திக்கு முதலிடமும் தமிழுக்கு இரண்டாவது இடமும் கொடுக்கப்பட்டுள்ளதே, இது எதைக் காட்டுகிறது!"
"சொல், தம்பி!"
"தமிழர்கள் இன்னும் அடிமைகளாகவே இருக்கிறார்கள் என்பதைத் தானே அண்ணா காட்டுகிறது?"
"எனக்குத் தெரியாது தம்பி!"

-தமிழவேள்

மேல் சாதியார் ...

(6-ஆம் ப்க்கத் தொடர்ச்சி)

ஓய்வு பெற்ற மேல் சாதிக்காரர்களைத் தமிழ் தொடர்பான உயர் பதவிகளில் ஏன் அமர்த்த வேண்டும்? இதைக் கேட்பவர்கள் யாரும் இல்லாததால், மேல் சாதியார் அமைச்சர்களின் தோளிலே ஏறி மிக மிக வசதியாகப் பதவியில் உட்கார்ந்து கொள்கிறார்கள். அங்கே காப்பாக இருந்து கொண்டு தாழ்த்தப்பட்டுப் பிற்படுத்தப்பட்ட மக்களின் நலன்களைக் கரம்பித் தின்று கொண்டே இருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோரின் ஏமாளித்தனம் வாட்டத்தைத் தந்தாலும், இவ்வளவு அழகாகத் திட்டமிட்டுச் செயல் செய்யும் மேல்சாதிக்காரர்களின் "அறிவாளித்தனத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது. (ஆமாம்: இது அறிவுடைமை இல்லை,—அறிவாளித்தனம்.) பாருங்களேன்; ஓய்வுபெற்ற தங்கள் உயர்சாதியார்இருந்த பதவியைத் தாங்களே பிடித்துக் கொள்ளுவதற்கு, புத்தக வெளியீட்டு விழா என்ற பெயரிலே அல்லவா திட்டம் தீட்டுகிறார்கள்.

-முனைவர் சாலை இளந்திரையன்
புதுத் தில்லி-5.

(6-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் நிலம் இதழை...

கொடுப்பது தங்களைப் போன்ற தந்நலங் கருதா வெந்திறல் மறவர்க்கே இயலும்.

—செ. நடராசன். சென்னை—78.

○ நான் எதிர்பார்த்ததைவிட மிகவும் சிறப்பாகவும் எடுப்பாகவும் இன்னும் உள்ளபடியே சொல்வதானால் கவர்ச்சியாகவும் இருக்கக்கண்டு வியப்பும் மகிழ்வும் கொண்டேன். இவ்விதழ் மேலும் பல சிறப்புகளைப் பெற்று உலகத் தமிழின மக்களனைவரின் கைகளிலும் தவழப் பெருவிழைவு கொள்கிறேன்.

—சி இளஞ்சேரல் முது பாண்டியன் மின்பாறை

● தமிழ்நிலம் வருக! தழைக தமிழே!
தமிழ்நல மெல்லாம் இதனால் பெருகவே!

—க. தமிழமல்லன் புதுச்சேரி-9.

○ தமிழினத்தை, தமிழ்மொழியை உலகெங்கிலும் பறைசாற்றி முறையான சிறந்த தமிழ் ஏடொன்றை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தங்களுக்கு எங்களது கழகத்தின் சார்பாக உள்ள நிறைவான வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—பாகை மு வடிவேல்
தலைவர், தமிழர் தேசியக் கழகம், சென்னை-68.

○ பயனில்லாப் பாழும் இதழ்கள் பல்கிப் பெருகிடும் இக்காலை, படித்துப் பயனுறுதற்கு, இன நலன், மொழி நலன், அறிவு நலன் பெறுதற்கு ஏற்ற அரும் பெட்டகமாய்த் தோன்றியுள்ள தமிழ் நிலத்தை வரவேற்கின்றேன்.

—இரா சம்பத் தருமபுரி-2.

○ முதல் இதழே தன் அரிமா அடியை எடுத்து வைத்து விட்டது செம்மாந்து நடையிடும் களிற்றினைப் போல் இக்கயமைகள் நிறைந்த இத்தமிழகத்தை எப்படியும் பாடு பெறச் செய்தல் வேண்டும் என்ற முழு மூச்சுடன் போருக்குப் புறப்படும் புலியென அது தமிழ மண்ணில் அடியெடுத்து வைத்துவிட்டது.

—மெய் அருண்மொழியன். முகவை.

...தொடரும்.

திருச்சி உ. த. மு. க. மாவட்டச் செயலர் நாரா. மகிழ்நன் திருமணம்!

கடந்த நளி. 5 (21-11-82) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் திருச்சி மாவட்ட உ.த.மு.க. செயலாளர் திரு. நாரா. மகிழ்நன் அவர்களுக்கும், தெ ஆ. புக்குளம் (தியாக துருகம்) செல்வி. இரேணுகாம்பாளுக்கும் திருச்சி, மலைக்கோட்டை தாயுமானவர் திருமுன் சிறப்புற நடைபெற்றது. திருமணத்திற்கு உறவினர்களுடன் ஏராளமான தென்மொழி அன்பர்கள், உ த.மு.க தொண்டர்கள் பாரத மிகுமின் தொழிலக அன்பர்கள், மற்றும் திராவிடர் கழக அன்பர்கள் அனைவரும் வந்திருந்து மணமக்களை வாழ்த்தி மகிழ்ந்தனர். பாவலரேறு பெருஞ்சித்திரனார் உடல் நலக் குறைவு காரணியமாக நேரில் வரவியலாது மடல்வழி தம் மனம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

அறிஞர்கள், தலைவர்கள் 'தமிழ்நிலத்'தை வாழ்த்துகின்றனர்!

✱ தவத்திரு குன்றக்குடி அடிகளார் — குன்றக்குடி.

பாவலரேறு திரு. பெருஞ்சித்திரனார் அவர்களை சிறப்பாசிரியராகக்கொண்டு வெளிவரவிருக்கும் 'தமிழ்நிலம்' இதழ், தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் நிறை பயன் அளிக்கும் என்பது உறுதி.

✱ கி ஆ. பெ. விசுவநாதம் — திருச்சி-8.

'தமிழ் நிலம்' நாட்டுக்கும் மொழிக்கும் மக்களுக்கும் நற்றொண்டுகள் பல புரிந்து சிறப்பெய்தி தமிழகம் முழுதும் ஒளிவீச வேண்டுமென முழுமனத்துடன் வாழ்த்துகிறேன்.

✱ பர். தமிழண்ணல், — மதுரை-21.

தங்கள் கழகத்தின் 'தமிழ் நிலம்' செய்தியிதழ் வெளியீட்டு விழாவிற்கு என் மனம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன்.

✱ பேரா. ந. இராமநாதன், க. மு. — சென்னை-7.

தமிழ் நிலம் என்று தொடங்கும் இதழ் தமிழ் நிலத்தை வடவர் - பார்ப்பனர் பிற மாநிலத்தார் வல்லாளுமையினின்றும் மீட்டுத்தரும் பணியில் முன்னின்று தொண்டாற்றி வெற்றி பெற வாழ்த்துகின்றேன்.

✱ ப நெடுமாறன் க மு. — மதுரை-20.

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் செய்தி இதழாகத் 'தமிழ் நிலம்' வெளியிடவிருப்பதை அறிய மகிழ்கிறேன். தமிழ்க்குமுகாயாம் எல்லா வகையிலும் கடுமையான தன்னாய்வுக்கு ஆளாகியிருக்கின்ற வேளையில் இந்த இதழ் வருகிறது தங்களின் எழுத்துவன்மை உலகெங்கிலும் உள்ள தமிழர்களை உணர்வு பெற்றவர்களாக மாற்றும் என்பதில் ஐயமில்லை. தங்கள் இதழ் வளர்ந்தோங்க என் நல் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✱ வி. அய். சுப்பிரமணியன் தமிழ்ப் பல்கலைக் கழகம் துணைவேந்தர் — தஞ்சாவூர் - 1.

உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் செய்தி இதழாகத் 'தமிழ் நிலம்' வெளி வருவது அறிந்து மகிழ்ச்சி தமிழுக்கும் தமிழர்க்கும் புகழ் சேர்க்கும் தங்கள் முயற்சியை பாராட்டுகிறேன்.

✱ பேரா. இரா. மதிவாணன் க. மு. — சென்னை-8.
சொற்பிறப்பியல் அகரமுதலித்துறை

தங்கள் தனித்தமிழ் வளர்ப்பு முயற்சிக்குத் தமிழகம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. தங்கள் ஊக்கம் ஆக்கம் வினைப்பதாகுக.

✱ திருக்குறள். வீ. முனுசாமி — விழுப்புரம்.

தமிழ் நிலம் சிறந்து புகழேந்தி வளர வாழ்த்துகின்றேன்.

✱ பேரா மு தமிழ்க்குடிமகன் — யாதவர் கல்லூரி.
முதல்வர் — மதுரை-14.

இதழ் செப்பமாக உள்ளது. பாவலரேறு அவர்களின் கைவண்ணம் பளிச்சிடுகின்றது. தங்களைப்போல் முழு நேரமும் தமிழின மேம்பாட்டுக்காகச் செலவிடும் பெருமக்களை வலுப்படுத்துவது எங்கள் கடமை.

✱ சுப சுப்பிரமணியன் — போர்ட்டுபிளேயர்
ஆசிரியர், அந்தமான் முரசு. — அந்தமான்.

'தமிழ் நிலம்' கிழமை ஏடு தமிழினத்தின் மீட்சிக்கும் விழிப்புணர்விற்கும் பேரொளியாக வழிகாட்டும் போராட்டக் கருவியாகப் பயன்படும் என உறுதியாக நம்புகிறேன். தமிழினத்தின் உயர்வும் வெற்றியும் தமிழினத்தின் எதிர்காலத்தைச் சிறந்ததாக உருவாக்க உதவும் என்பதை உறுதியாக நம்புகிறேன்.

—தொடரும்

உ. த. மு. க.வின் உயர்ந்த கொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல், அணுகுமுறை.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். பதிவுஎண். TN/MS(C)\657

அனுப்புதல்:
'தமிழ் நிலம்'
5, அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—5.

உறுப்பினர்.
ஆண்டு கட்டணம் ரூ. 36/-
அரையாண்டு கட்டணம் ரூ. 18/-

பெறுநர். நூல் அஞ்சல்
திரு / திருவாட்டி.

ஆசிரியரும், வெளியிடுபவரும் : பாவலரேறு பெருஞ்சித்திரனார், அச்சிடுவோர்: 'தென்மொழி' அச்சகம், சென்னை-5.